## மேட்டூர் சார்பு நீதிமன்றம்

| M.C.O.P. No. 25/2017 | Date : 12.07.2023 | PW1 |
|---|---|---|
| Name: சுரேஷ் | S/o. குப்புசாமி | |
| Evidence Recorded Time: 03.36 P.M. to 03.45 P.M. | | |

**3-ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை :-**

நான் தற்போது எந்த தொழிலும் செய்யவில்லை. விபத்து சமயத்தில் கைத்தறி நெசவு தொழில் செய்து வந்து அதன் மூலம் மாதம் ரூபாய் பத்தாயிரம் சம்பாதித்து வந்ததற்கான ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். விபத்து சமயத்தில் TN 52 V 1485 என்ற இருசக்கர வாகனத்தை ஓட்டி சென்றேன். காவல் நிலையத்தில் விபத்து சம்மந்தமாக நான் தான் புகார் கொடுத்தேன். நான் TN 52 T 2958 ஸ்பீடு ஆம்புலன்ஸ் டிரைவர் மீது புகார் கொடுத்தேன். விபத்து நடந்து இரண்டு நாட்கள் கழித்து புகார் கொடுத்தேன் என்றால் விபத்து ஏற்பட்டவுடன் மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்ந்தேன். மறுநாள் போலீசார் என்னை சேலம் மருத்துவமனையில் விசாரிக்கும் போது புகார் கொடுத்தேன். நான் புகார் கொடுத்த பிறகு குற்றவியல் நீதிமன்றங்களில் நான் எந்த சாட்சியும் அளிக்கவில்லை என்றால் சரிதான், இதுவரை சம்மன் எதுவும் வரவில்லை. போலீசில் கொடுத்த புகார் என்ன ஆனது என்று தெரியுமா என்றால் தெரியாது. போலீசார் விசாரணையில் விபத்திற்கு நான் தான் காரணம் என்று கூறி வழக்கை பொருண்மை தவறு என்ற அடிப்படையில் முடித்துவிட்டார்கள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. வழக்கு முடித்தது தெரிந்தும், தெரியாது போல சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இறுதி விசாரணையின் அடிப்படையில் நான்தான் Tort-feasor என்பதால் என்னுடைய கவனகுறைவால் ஏற்பட்ட விபத்திற்கு நான் இழப்பீடு கோர முடியாது என்றால் சரியல்ல. என்னுடைய மனு செலவு தொகையுடன் தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை – இல்லை.**

ஒம்/–PW1,

இதில் கண்ட சங்கதிகள் என் முன்னிலையில் சாட்சியிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் /கைரேகை செய்தார்.

ஒம்/–S.முத்துராமன்,
சார்பு நீதிபதி, மேட்டூர்.